மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 20/2018 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | லட்சுமணன் | நாள் | 04.09.2023 |
| தகப்பனார் பெயர் | தானப்பன் | | |

**5 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை** :–

1) எதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், என் பாட்டனார் ராமசாமி கவுண்டர் பெயரில் உள்ள பட்டாவை 1ம் பிரதிவாதி மாற்றுவதற்கு வருவாய் துறையில் முயற்சி செய்தார். அதனால், பட்டா மாறுதல் செய்யக் கூடாதென பரிகாரம் கோரி இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன்.

2) இவ்வழக்கில் 1, 5 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளனர் என நான் படித்து பார்த்தேனா என்றால், படித்துப் பார்க்கவில்லை. தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால், என் பாட்டனார் ராமசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்டது.

3) என் வழக்குரையிலோ, என் முதல் விசாரணை சாட்சியத்திலோ, என் பங்காளிகளுக்கும் சேர்த்து நான் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ள நிலையில், மேற்படி பங்காளிகள் யார் யார் என என் வழக்குரையில் நான் குறிப்பாக சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன்.

4) என் பாட்டனார் ராமசாமி கவுண்டர் எப்போது இறந்தார் என்றால், சுமார் 40 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். தேதி, மாதம், வருடம் சரியாக நினைவில்லை. மேற்படி ராமசாமி கவுண்டருக்கு எத்தனை வாரிசுகள் என்றால், 4 ஆண் வாரிசுகளும், 2 பெண் வாரிசுகளும் உள்ளனர்.

5) மேற்படி பெண் வாரிசுகளை பற்றி என் வழக்குரையில் நான் எதுவும் சொல்லவில்லை என்றால், சரிதான். அவர்களுக்கு சொத்துக்கள் தனியாக அளிக்கப்பட்டுவிட்டது என்பதால் அவர்களை பற்றி நான் குறிப்பிடவில்லை.

6) தாவா சொத்திற்குரிய சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால், தெரியும். தாவா சொத்தின் ச.எண்.292/3 ஆகும். தாவா சொத்தின் விஸ்தீரணம் 2 ஏக்கர் 30 சென்ட்

ஆகும். தாவா சொத்தின் வடபுறம் காலணி சுடுகாடு உள்ளது. கிழபுறம் பாண்டியன் (எ) கூளை கவுண்டருடைய நிலம் உள்ளது. தெற்குபுறம் ஆதிதிராவிடர் நிலம் உள்ளது. மேற்குபுறம் பூசாரி மனைவியின் நிலம் உள்ளது.

7) என் வழக்குரையில் தாவா சொத்தை தவிர என் பாட்டனாருக்கு இதர சொத்துக்கள் உள்ளதாக சொல்லியுள்ள நிலையில், மேற்படி சொத்துகளுக்கு உண்டான சர்வே எண்ணோ, விஸ்தீரணமோ நான் என் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால், இல்லை.

8) இவ்வழக்கிற்கு முன்பாக அ.வ.எண்.589/1996 என்ற வழக்கு தாக்கல் செய்யபட்டது என்றால், சரிதான். மேற்படி வழக்கை என் தந்தை பாகபிரிவினை கோரி அவரது சகோதரர்கள் மீது தாக்கல் செய்திருந்தார். மேற்படி வழக்கில் தற்போது என்ன முடிவு ஆனது என்றால், தற்போதும் அந்த வழக்கு மாண்பமை மேட்டுர் சார்பு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.

9) நான் சொல்வது தவறானது என்றாலும், மேற்படி அ.வ.எண்.589/1996 என்ற வழக்கு மேட்டுர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் முழு விசாரணைக்கு பின்பு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றாலும், சரியல்ல.

10) 1ம் பிரதிவாதி என்ன வேலை செய்து வந்ததாக நான் என் வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால், அவர் பத்திர எழுத்தர். எத்தனை வருடங்கள் 1ம் பிரதிவாதி பத்திர எழுத்தராக இருந்தார் என நான் என் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான்.

(5 முதல் 9 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.